


**27.01.2025**

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. புதுதில்லியில் தேசிய மாணவர் படை பேரணியில் பங்கேற்கும் மாணாக்கரிடையே பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று கலந்துரையாடுகிறார்.

2. மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்க ஏலம் நிறுத்தப்பட்டதற்கு பிஜேபி மேற்கொண்ட நடவடிக்கையே காரணம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3 பிரதமரின் மீன்வளர்ப்பு திட்டத்தின் கீழ் நாகை மாவட்ட கடலில் மீன் இனப்பெருக்கத்தை அதிகரிக்க செயற்கை பவள பாறைகளை அமைக்கப்பட உள்ளன.

4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் வழங்கும் பணிகள் இன்று தொடங்கின.

5. புனேயில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் **Vaidehi -** ரஷ்யாவின் **Tatiana -**வை இன்று எதிர்கொள்கிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

பிரதமர் - தேசிய மாணவர் படை

புதுதில்லி கரியப்பா அணிவகுப்பு மைதானத்தில் பிரதமரின் தேசிய மாணவர் படை பேரணியில் பங்கேற்கும் மாணாக்கரிடையே பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று கலந்துரையாடுகிறார்.

இளைஞர் சக்தி, வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற கருப்பொருளுடன் இப்பேரணி இந்தாண்டு நடைபெறுகிறது.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக தேச கட்டமைப்பில் தேசிய மாணவர் படையினரின் பங்களிப்பை பிரதிபலிக்கும் வகையில் 800க்கும் மேற்பட்ட மாணாக்கரின் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன..

18 நட்பு நாடுகளை சேர்ந்த 144 இளம் மாணவர் படையினர் இப்பேரணியில் பங்கேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடுமுழுவதிலுமிருந்து இளைஞர் பாரதம், கல்வி அமைச்சகம், பழங்குடியினர் விவகார துறைகளை சேர்ந்த 650க்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டர்களும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

**********

பிரதமர் நன்றி

நாட்டின் 76ஆவது குடியரசு தின விழாவிற்கு வாழ்த்து தெரிவித்த உலக தலைவர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரன் தெரிவித்த வாழ்த்து செய்திக்கு நன்றி தெரிவித்த பிரதமர் பாரீஸில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு செயல்திட்ட உச்சிமாநாட்டின்போது திரு.மேக்ரனை சந்திப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக குறிப்பிட்டார்.

அயர்லாந்து பிரதமர் திரு. மைக்கில் மார்ட்டின் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவிற்கு பதில் அளித்துள்ள பிரதமர், இந்தியா - அயர்லாந்து நாடுகளுக்கிடையிலான நட்புறவு வரும் ஆண்டுகளில் மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

**********

முருகன்

மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்க ஏலம் நிறுத்திவைக்கப்பட்டதற்கு பிஜேபியே முழு காரணம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக இன்று திருச்சி விமான நிலையம் வந்த அமைச்சர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்விவகாரத்தில் திமுக மக்களை ஏமாற்றுவதாக குறை கூறினார்.

அப்பகுதியில் கோவில்களும், புராதான சின்னங்களும் இருப்பதாகவும் எனவே சுரங்கம் வேண்டாம் என்றும் மக்கள் தெரிவித்ததை அடுத்து பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை மத்திய சுரங்கத்துறை அமைச்சர்

திரு.கிஷன்ரெட்டியை சந்தித்து சுரங்க ஏலப்பணிகளை நிறுத்த கோரிக்கை விடுத்ததாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

வேங்கைவயல் விவகாரத்தை திமுக அரசு திசைதிருப்புவதாகவும் எனவே இந்த விவகாரத்தை சிபிஐ-வசம் ஒப்படைக்க வேண்டும் என்று பிஜேபி தொடர்ந்து வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார்.

வேங்கை வயல் மக்களுக்கு சரியான நீதியை சிபிஐ விசாரணை மூலமே வழங்க முடியும் என டாக்டர் எல்.முருகன் தெரிவித்தார்.

**********

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று ஐக்கிய அரபு அமீரகம் செல்கிறார்.

இப்பயணத்தின்போது இருநாடுகளுக்கிடையிலான நட்புறவின் முன்னேற்றம், புதிய துறைகளில் வாய்ப்புகள், இருதரப்பு உறவு மேம்பாடு ஆகியவை குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் அமைச்சர் விரிவாக கலந்தாலோசிக்கிறார்.

டாக்டர் ஜெய்சங்கரின் இப்பயணம் இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான விரிவான அரசியல் நட்புறவை முன்னெடுத்து செல்வதோடு, இருநாடுகளுக்கிடையிலான பிணைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

பியூஷ்கோயல்

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் இரண்டு நாள் அரசு முறை பயணமாக இன்று ஓமன்செல்கிறார்.

11ஆவது கூட்டு ஆணையக்கூட்டத்தில் பங்கேற்கும் அவர் அந்நாட்டு வர்த்தக தொழில்துறை அமைச்சர் கொயாஸ் பின்னுடன் வர்த்தகம், முதலீடு, உலகளாவிய பொருளாதாரம் உள்ளிட்டவை குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

**********

செயற்கைகோள்

ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து இஸ்ரோவின் 100ஆவது விண்வெளி ஏவுதள் திட்டத்தின் கீழ் **NVS 02** செயற்கைகோள் **GSLV F15** ராக்கெட் மூலம் நாளை மறுநாள் காலை மணி 6.23க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

கடல் வழி பயணத்திற்கு பெரிதும் பயனளிக்கும் 2 ஆயிரத்து 250 கிலோ எடை கொண்ட இந்த அதிநவீன செயற்கைகோள் தற்போதுள்ள வழிகாட்டும் செயற்கைகோள்களுக்கு மாற்றாக ஏவப்படுகிறது.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்த புதிய தலைமுறை செயற்கைகோள்கள் துல்லிய அணுசக்தி கடிகாரங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைகோளின் ஆயுட்காலம் 12 ஆண்டுகள் என்பது குறிப்பிடத்தக்கது,

இந்த செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டு 19 நிமிடங்களுக்குள்ளேயே புவி சுற்றுபாதையில் நிலைநிறுத்தப்படும்.

**********

<u>பவளபாறை</u>

பிரதமரின் மீன்வளர்ப்பு திட்டத்தின் கீழ் நாகை மாவட்ட கடலில் மீன் இனப்பெருக்கத்தை அதிகரிக்க செயற்கை பவள பாறைகளை அமைக்க மாநில மீன்வளத்துறை திட்டமிட்டுள்ளது.

11 கோடியே 79 லட்ச ரூபாய் மதிப்பிலான இந்த திட்டம் மத்திய மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

காலநிலை மாற்றத்தால் கடலில் மீனவளங்கள் குறைந்துவரும் நிலையில், பவள பாறைகள் மூலம் மீன் இனப்பெருக்கத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நாகை மீன்வள துறை தெரிவித்துள்ளது,

இதன்படி 10 நாட்டிக்கல் கடல் மைல் தூரத்தில் நாகை கடலில் 39 இடங்களில் வட்டம், முக்கோண வடிவங்களில் 180 செயற்கை பவள பாறை பிரிவுகள் 10 மீட்டர் ஆழத்தில் அமைக்கப்பட உள்ளன.

இப்பணிகள் வரும் மார்ச் மாதத்திற்குள் முடிவடையும் என்று நாகை மீன்வள திட்ட செயற்பொறியாளர் திரு.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

**********

<u>சேகர்பாபு</u>

தைப்பூச திருவிழாவை ஒட்டி பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 3 நாட்களுக்கு கட்டண தரிசனம் ரத்து செய்யப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேரோட்டத்திற்காக 46 லட்சம் ரூபாய் செலவில் கட்டமைக்கப்பட்ட புதிய தேரின் வெள்ளோட்டத்தில் இன்று கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பேசினார்.

தைபூச திருவிழாவை ஒட்டி இரண்டு லட்சம் பக்தர்களுக்கு அன்னதானத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், பக்தர்களின் வசதிக்காக இலவச பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வாய்ஸ்

மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி உடனிருந்தார்.

**********

சாத்தனூர் அணை

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையிலிருந்து பாசனத்திற்கான தண்ணீரை மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு இன்று திறந்துவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, இன்றுமுதல், மே மாதம் 17-ம் தேதிவரை 110 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்றார்.

**********

எம்.ஆர்.கே.

தர்மபுரி சிப்காட்டில், தொழில்செய்ய விரும்புவோர், இணையதளம் மூலம் விண்ணப்பிக்குமாறு, மாநில வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி அருகே நடைபெற்றவிழாவில் 15 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அவர், 524 பயனாளிகளுக்கு 5 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

**********

ஈரோடு – பூத்சிலிப்

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டுகள் வழங்கும் பணி இன்று தொடங்கியது.

200க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இத்தொகுதிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் இப்பணியை மேற்கொள்கின்றனர்.

இப்பணிகள் வரும் ஒன்றாம் தேதிக்குள் முடிவடையும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

சிவகங்கை

சிவகங்கை உருவான 295ஆவது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**********

**போராட்டம்**

நாமக்கல் மாவட்டம் ஆர்.கவுண்டம்பாளையம் ஊராட்சியை ராசிபுரம் நகராட்சியோடு இணைக்க எதிர்ப்பு தெரிவித்து அவ்வூராட்சியை சேர்ந்த 100 நாள் திட்ட பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த இணைப்பின் மூலம் தற்போது இருக்கும் 100 நாள் திட்ட வேலை கிடைக்காமல் போய்விடும் என்றும், இதனால் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் கூறி கவுண்டம்பாளையம் ஊராட்சியை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் இந்த ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**********

**சாலை பாதுகாப்பு**

சென்னை தாம்பரம் வட்டார போக்குவரத்து அமைப்பு சார்பில் சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி தலைகவசம் அணிவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

பொதுமக்கள் போக்குவரத்து காவலர்கள் என 200க்கும் மேற்பட்டோர் இதில் பேரணியாக சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

**********

**சிம்ஸ்**

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் கோடை பருவ பழக்கண்காட்சியை முன்னிட்டு 5 லட்சம் விதைகள் மற்றும் நாற்றுகள் நடும் பணிகள் இன்று தொடங்கின.

ஃபிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து நாடுகளிலிருந்து மலர் விதைகள் வரவழைக்கப்பட்டு நாற்றுகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

சால்வியா, டேலியா, மேரிகோல்டு, லில்லியம், பெக்கோனியா உள்ளிட்ட பல்வேறு வகையான 5 லட்சம் மலர் நாற்றுகளும் நடவு செய்யப்படுகின்றன.

**********

**டென்னிஸ்**

புனேயில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் **Vaidehi Chaudhari -** ரஷ்யாவின் **Tatiana Prozorova-** வை இன்று எதிர்கொள்கிறார்.

மற்றொரு போட்டியில் அங்கிதா ரெய்னா - ரஷ்யாவின் **Elena Pridankina-**வை தற்போது எதிர்கொண்டுள்ளார்.

**********

கிரிக்கெட்

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி ராஜ்கோட்டில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**********